


திருச்சி இந்திராகாந்தி மகளிர் கல்லூரியில் நடந்த முதலாமாண்டு மாணவிகளுக்கான வரவேற்பு நிகழ்ச்சியில் கல்லூரி செயலாளர் மீனா பேசினார். அருகில் கல்லூரி தலைமை செயல் அதிகாரி சந்திரசேகரன், இயக்குனர் அபர்ணா, முதல்வர் கெஜலட்சுமி.

# இந்திராகாந்தி கல்லூரியில் குதூகலம்

## மாணவிகளுக்கு உற்சாக வரவேற்பு

**திருச்சி, ஜூலை 4–**

திருச்சி இந்திராகாந்தி கல்லூரியில் முதலாமாண்டு மாணவிகளை வரவேற்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது.

கல்லூரி செயலாளர் மீனா நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து பேசுகையில், வாழ்க்கையில் நட்பு, சந்தோசம் இரண்டிற்கும் இணை கிடையாது. கல்லூரி வாழ்க்கையில் நல்ல நண்பர்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ், ஆங்கில செய்திதாள்களை நாள்தோறும் படித்து தங்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடின உழைப்பு, தன்னம்பிக்கை, துணிவு ஆகியவற்றுக்கு ஈடு கிடையாது என்றார். கல்லூரி தலைமை செயல் அதிகாரி சந்திரசேகரன் பேசுகையில், மாணவிகள் ஒவ்வொருவரும் வெவ்வேறு குடும்ப பின்னணியில் இருந்து வந்திருந்தாலும் வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும். ஆற்றல், தொழில்நுட்ப அறிவு, தகவல் தொடர்பு திறன், நல்ல நடத்தை ஆகியவற்றை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இந்திராகாந்தி, அப்துல் கலாம் ஆகியவர்களை முன்மாதிரியாக கொண்டு செயலாற்ற வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் கல்லூரி இயக்குனர் அபர்ணா, ஆசிரியர்கள், மாணவிகள் உட்படபலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் மாணவிகளின்மவுன மொழி நாடகம் நடந்தது.

கல்லூரி முதல்வர் கெஜலட்சுமி வரவேற்றார். துணை முதல்வர் ஸ்ரீதேவி நன்றி கூறினார்.

# முதலாமாண்டு மாணவிகளுக்கு வரவேற்பு




தமிழகம் முழுவதும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதலாமாண்டு வகுப்புகள் நேற்று தொடங்கின. திருச்சி சத்திரம் பஸ் நிலையம் அருகில் உள்ள ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரிக்கு வந்த முதலாமாண்டு மாணவிகளுக்கு, சீனியர் மாணவிகள் பலூன்களை பறக்க விட்டு உற்சாக வரவேற்பு அளித்தபோது எடுத்த படம்.

# கலை, அறிவியல் கல்லூரிகள் திறப்பு: முதலாமாண்டு மாணவர்களுக்கு உற்சாக வரவேற்பு

**சென்னை, ஜூலை 3:** தமிழகத்தில் கலை, அறிவியல் கல்லூரிகளில் நிகழ் கல்வியாண்டில் முதலாமாண்டுக்கான வகுப்புகள் திங்கள்கிழமை தொடங்கியது. உற்சாகத்துடன் வருகை தந்த மாணவ, மாணவிகளுக்கு ஆசிரியர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

பிளஸ் 2 முடித்த மாணவர்கள் பிஏ, பி.காம், பி.எஸ்சி., பிபிஏ போன்ற கலை, அறிவியல் படிப்புகளில் சேர அதிக ஆர்வம் காட்டினர். குறிப்பாக, பி.காம் பாடப்பிரிவுக்கு கடும் போட்டி இருந்தது.

தமிழகத்தில்164 அரசு கலை, அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இதுதவிர ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் சுயநிதிக் கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் உள்ளன.




திருச்சி இந்திரா காந்தி மகளிர் கல்லூரியில் திங்கள்கிழமை முதலாமாண்டு மாணவிகளுக்கு பலூன்களை பறக்கவிட்டு வரவேற்பளித்த இரண்டாமாண்டு மாணவிகள்.

இந்தநிலையில் கலை, அறிவியல் கல்லூரிகளில் உள்ள ஒரு லட்சத்து 7 ஆயிரம் இடங்களுக்கு ஒட்டுமொத்தமாக 2 லட்சத்து 35 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டன; அதில் தகுதியான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தற்போதுவரை 84 ஆயிரத்து 899 மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர். மீதமுள்ள இடங்களுக்கு செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை நேரடிக் கலந்தாய்வு நடத்தப்படவுள்ளது.

**முதலாமாண்டு வகுப்புகள் தொடக்கம்:** இதற்கிடையே கலை, அறிவியல் கல்லூரிகளில் இளநிலை படிப்புகளில் முதலாமாண்டு மாணவர்களுக்கு திட்டமிட்டபடி திங்கள்கிழமை முதல் வகுப்புகள் தொடங்கப்பட்டன. மாநிலத்தில் உள்ள அனைத்து கலை, அறிவியல் கல்லூரிகளும் ஒரேநாளில் திறக்கப்பட்ட நிலையில் மாணவ-மாணவிகள் உற்சாகமாக வகுப்புகளுக்கு சென்றனர்.

**உற்சாக வரவேற்பு:** புதிதாக வந்த மாணவர்களை கல்லூரியின் மூத்த மாணவர்கள், பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் வரவேற்கும் வகையில் சிறப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர். இனிப்பு மற்றும் மலர் கொடுத்து வரவேற்றதுடன் அவர்களை வகுப்பறையில் அமர வைத்து உற்சாகப்படுத்தினர். இதையடுத்து, மாணவர்கள் ஒவ்வொருவராக அறிமுகம் செய்யப்பட்டனர். ஆங்கில பேச்சுத் திறனை வளர்க்கும் வகையில் தொடக்க வகுப்புகளை நடத்த கல்லூரிகள் திட்டமிட்டுள்ளன. சில கல்லூரிகளில் உயர் கல்வி வழிகாட்டு கலந்தாய்வு நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**சென்னையில்...:** சென்னையில் மாநில கல்லூரி, நந்தனம், வியாசர்பாடி அரசு கல்லூரி மாணவர்களுக்கு ஒழுக்க நெறிமுறைகள் குறித்த வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. அதேபோன்று ராணி மேரி, ஸ்டெல்லாமேரி, பாரதி, எத்திராஜ், கிறிஸ்தவ கல்லூரி, எம்ஓபி வைஷ்ணவா கல்லூரி உள்ளிட்ட மகளிர் கல்லூரிகளும் திங்கள்கிழமை பரபரப்பாக காணப்பட்டன. காலை மற்றும் மாலை வகுப்புகளில் சேர்ந்த மாணவ-மாணவிகள் முதல்நாள் வகுப்புக்கு பெற்றோருடன் வந்தனர். முதலாம் ஆண்டு மாணவர்களுக்கு வகுப்பு தொடங்கியதால் அரசு பேருந்துகள், மின்சார ரயில்களில் கூட்டம் அதிகம் காணப்பட்டது.